பக்கங்கள்:-19

காலை முரசு

## ரூ.500 கோடி மோசடி செய்த பிரமிட் சூத்திரதாரி கைது!



பிரமிட் திட்டத்தின் கீழ் 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தார் எனக்

06

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 14 | ஞாயிற்றுக்கிழமை | 28.01.2024 | அதிர்வு 180




# தமிழரசு நிர்வாகிகள் தெரிவு இறுதியானது! மாவை அதனை இரத்துச் செய்ய முடியாது!!

## அவருக்கு அந்த அதிகாரம் யாப்பின்படி இல்லை சிறீதரன், சுமந்திரன் இன்று அவரைச் சந்திப்பர்

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு அக்கூட்டத்திலேயே முறைப்படி அறிவிக்கப்பட்ட நிர்வாகிகள் தெரிவு இறுதியானது. அந்தத் தெரிவை இரத்துச் செய்யும் அதிகாரமோ, இரத்து செய்வதாக அறிவித்தல் விடும் அதிகாரமோ கட்சியின் முன்னாள் தலைவரான மாவை சேனாதிராஜாவுக்குக் கிடையவே கிடையாது.

இன்று நடைபெற வேண்டிய கட்சியின் தேசிய மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாக நேற்று மாலை அறிவித்து, மாநாட்டை குழப்பியமையும், முறையாக அறிவிக்கப்பட்ட நிர்வாகிகள் தெரிவு இரத்துச் செய்யப்பட்டதாக சில ஊடகங்களுக்கு அவர் தெரிவித்தார் என்று கூறப்படும் விடயமும் கட்சியின் யாப்பின்படி தவறான நடவடிக்கைகள்.

இன்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் அவரைக் கூட்டாக நேரில் சென்று சந்திக்கும் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பியும், எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் இந்த விடயங்களை அவருக்கு நேரில் சுட்டிக்காட்டி அவரை நெறிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

06

## வாவியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!



(நுவரெலியா நிருபர்)

நுவரெலியா, கிரகரி வாவியிலிருந்து நேற்று ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வாவியில் படகு சவாரியில் ஈடுபடுவோர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்

சடலமாக

06



தமிழரசுக் கட்சியின் நேற்றைய மத்திய குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களின் 'திருவிளையாடல்' குறித்து இன்று விலாவாரியாக சில விடயங்களை எழுத வேண்டி உள்ளது.

முதலில் கட்சியின் தலைவர் சிறீதரன் பற்றிய ஒரு குறிப்பு அவசியமாகின்றது.

தமிழரசுக் கட்சி போன்ற ஒரு பழமையான – பெருமை மிக்க – நிறுவனத்தை முன்னின்று வழிகாட்டி நடத்துவதற்கு

05

# அடக்குமுறைகளை மேற்கொள்வதற்காகத்தான் நிகழ்நிலை காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



நாட்டு மக்களின் அரசியல் உரிமைகளை பறித்து, அடக்கு முறைகளை மேற்கொள்ளும் வகையிலேயே இணையவழி (நிகழ்நிலை) காப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தேர்தல் இடம்பெற வேண்டிய இந்த ஆண்டில் இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை பொதுமக்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சட்டத்தின் ஊடாக மக்களின் அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் மீறப்படும் ஆபத்துள்ளமையினால் நியாயமான ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்ற பின்னர் இவ்வாறான ஒழுங்குமுறைப்படுத்தல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கம் கூறினாலும், இதற்கு குறிப்பிட்ட கால அவகாசமே வழங்கப்பட்டது.

அனைவரையும் பெயரளவில் பேச்சுவார்த்தைக்கு அழைத்து அரசாங்கம் தான் விரும்பியதை நிறைவேற்றியுள்ளது." – என்றார்.

# பிரமுகர்களின் மீது கண் வைக்கின்றது லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கிய அரசியல்வாதிகளின் சொத்து விவரங்களைப் பெற இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல்வாதிகள் மற்றும் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா அளவிலான வேதனம் பெறும் அரச சேவையில் உள்ள உயர் அதிகாரிகள், ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் உள்ளிட்டோரின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ள இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட 2023ஆம் ஆண்டு 9ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் அதிகாரத்தின்படி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் 80(1) பிரிவின்படி, ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள் மற்றும் சட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட 31 துறைகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 க்கு முன் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிடம் தமது சொத்துக்கள் அல்லது பொறுப்பு தொடர்பான அறிக்கைகளை வழங்க வேண்டும்.

ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் தலைவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கைகளை பெற்றுக்கொள்ள ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை இதன் விசேட அம்சமாகும்.

இதன்படி, பத்திரிகை கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ள பத்திரிகை உரிமையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பீட அங்கத்தவர்கள் மற்றும் 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள பெற்ற ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பீட உறுப்பினர்கள் , கீழே குறிப்பிட்டுள்ள படி வருடாந்திர சொத்துக்கள் மற்றும் கடன் தொடர்பான அறிக்கைகளை சமர்பிக்க வேண்டும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான சமர்ப்பணங்களை வழங்கும் நபர் கணவனாக இருந்தால், மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும், மனைவி, கணவன் மற்றும் குழந்தைகள் மற்றும் அவர்களுடன் பொதுவான வீட்டில் வசிக்கும் பிற நபர்கள் தொடர்பிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிற்கு இலத்திரனியல் முறையின் ஊடாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் தொடர்புடைய தொழில்நுட்ப கட்டமைப்பை உருவாக்க சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும். ஆனால் அதற்கான நிதியொதுக்கீடுகள் இன்னும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கவில்லை என அதன் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கத் தவறியவர்களுக்கு எதிராக நீதிவான் முன்னிலையில் வழக்குத் தொடரப்படலாம்.

குற்றவியல் விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒரு லட்சம் ரூபா அபராதம் அல்லது ஓராண்டு சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்க இந்தச் சட்டம் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

# சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியை இன்று

கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியைகள் இன்று ராஜகலுவ ரோமன் கத்தோலிக்க மயானத்தில் இடம்பெறவுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் உடல் புத்தளம் ஆராய்ச்சிக்கட்டுவையில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அவரது உடலுக்கு பல்வேறு தரப்பினரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதேவேளை, விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் அனுராத ஜயக்கொடியின் உடல் நேற்று கண்டியில் தகனம் செய்யப்பட்டது.



# ஜே.வி.பி. அலுவலகத்தை சுற்றிவளைத்தே தீருவோம்

## நிமல் லான்சா மிரட்டல்



"தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் விபசாரம் சட்டப்பூர்வமாக்கப்படும் என அக்கட்சி உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்து மீளப்பெறப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் அலுவலகத்தை மகளிர் படையுடன் சென்று சுற்றிவளைப்பேன்."

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா.

புதிய கூட்டணி எனும் பெயரில் அரசியல் கூட்டணியொன்று நேற்று உதயமானது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நிமல் லான்சா,

"விசபாரம் சட்டபூர்வமாக்கப்படும் என்ற கருத்தை ஜே.வி.பியினர் மீளப்பெற வேண்டும், அவ்வாறு இல்லையேல் மீளப்பெற வைப்போம். பெண்களை திரட்டிக்கொண்டு பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் அலுவலகம் சென்று, தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க விமர்சனம் முன்வைக்கின்றார், அவரால் சர்வதேசம் செல்ல முடியுமா என்ன?" – என்று நிமல் லான்சா கேள்வி எழுப்பினார்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் விபசாரம் சட்டபூர்வமாக்கப்படமாட்டாது என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இணையவழி பாதுகாப்புச் சட்டம் சஜித்தின் ஆட்சியில் இரத்தாகும்

## அவரே நேற்று தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்பு சட்டம், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இரத்துச் செய்யப்படும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அறிவித்தார்.

அத்துடன், குறித்த சட்டம் ஊடாக மக்களின் உரிமை மீறப்படுகின்றது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தலொன்று நடைபெறவுள்ள நிலையில், அரசியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே இந்தச் சட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளது. இது மக்களின் அரசியல் உரிமையை மீறும் செயல். இது தற்காலிகமான சட்டமாகும். இந்த ஜனநாயக விரோதச் சட்டம், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் மீளப்பெறப்படும்." – என்றார்.





# மனைவியைத் தீயிட்டுக் கொலைசெய்த கணவருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு!



தனது மனைவியைத் தாக்கி மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டுக் கொலைசெய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கணவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குளியாப்பிட்டி மேல் நீதிமன்றம் மேற்படி நபருக்குத் தீர்ப் பளித்துள்ளது.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த நபருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி தனது மனைவியைத் தாக்கி அறையொன்றில் வைத்து மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து கொலை செய்த சம்வம் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார். இவர்க ளுக்கு இரு பிள்ளைகள் உள்ளனர்.



# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த லொறி ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 118 கிலோ மீற்றர் தூரத்திற்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள் ளது.

விபத்து காரணமாக மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் வாகனங்கள் தடைப்பட்டுள்ளன.

இதனால், கொழும்பு நோக்கி பயணிக்கும் வாகனங்கள், கொக்மாடுவ ஊடாக அதிவேக நெடுஞ்சாலையில் மீண்டும் நுழையுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

# மன்னா ரமேஷின் சகாவின் வீட்டில் ஐஸ், ஹெரோயின்

## சந்தேகத்தில் மனைவி கைது



வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள பாதாளக் குழு உறு-ப்பினரான மன்னா ரமேஷின் பிரதான உதவியாளர் ஒருவரின் வீட்டில் இருந்து ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, மன்னா ரமே ஷின் பிரதான உதவியாளரின் வீட்டைச் சோதனைக்குட்படுத்தப் பொலிஸார் சென்றுள்ளனர். தகவல் அறிந்து, வீட்டில் இருந்து அந்த நபர் தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து அவரின் வீட்டைப் பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது 91 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 70 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் அடிப்ப டையில் அவரின் மனைவி கைது செய்யப்பட்டுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நான்ஒன்றும்புதியவன்அல்லன், முதிர்ந்த தலைவன்தான் என்பதை பெரும்பாலும் செயலிலும் நேற்று அவர் நிரூபிக்க முயன்றிருக்கின்றார்.

தலைவர் தெரிவில் தமது வெற்றிக் காகத் தம்முடன் அணி சேர்ந்த தரப்புக்க ளுடன் ஒன்றிணைந்து 'சிறுமைத்தன மான' அரசியல் செய்வதை விடுத்து, தலை வன் என்ற முறையில் எல்லோரையும் அரவணைத்து, ஒன்றாக்கி, உட்கட்சி மோதல்களைப் புறந்தள்ளி, ஐக்கிய பட்ட முயற்சிக்காக அவர் இயன்றளவு இறங்கி வந்திருக்கிறார். முதிர்ந்த அரசியல்வாதி யாக அவர் செயல்பட முனைந்தமை யால், இதுவரை அவரோடு கன்னை சேர்ந்திருந்த சிலர் அவரைத் துரோகி யாக சித்திரிக்கும் அவலமும் அவருக்கு நேர்ந்திருக்கின்றது.

கட்சியின் தலைவராக வந்தால் கட் சித் தலைவராகவே செயல்படுவேன், கன் னையின் தலைவராக அல்லன் என்ற அவரது பிடிவாதம் அவருக்கு பல நெருக்கு வாரங்களை தந்த போதிலும் அனைவ ரையும் அரவணைத்துத்தான் கட்சியை வழிகாட்டுவேன் என்ற அந்தப் பிடிவாதம் எனக்குப் பிடித்திருக்கிறது.

இது விடயத்தில் கடந்த சில நாள்களாக வசனங்களுக்கு இடையில் நான் கோடி காட்டி வந்த ஐயுறவுகளை நான் வாபஸ் வாங்குகிறேன்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராஜா, சி.வி.கே.சிவஞா னம், குலநாயகம் ஆகியோரின் இல் லங்களுக்கு சிறீதரன் 'வீடு தேடி விசிட்' அடித்தார் என்று நேற்றுக் குறிப்பிட்டு இருந்தேன். இந்த வரிசையில் கட்சி யின் பொருளாளர் கனகசபாபதியின் வீட்டுக்கும் அன்று அவர் சென்றிருந்தார். அதை நேற்று நான் தவற விட்டிருந்தேன்.

இந்த நால்வரையும் சேர்த்துத் தான் நமது ஊடக வட்டாரங்கள் 'தமிழரசு கட்சி யின் மார்ட்டின் வீதி வயோதிப மடம்' என்று குறிப்பிட்டு வருவது வழமை. கட்சி யின் மூத்த உறுப்பினர்களான இந்த நால்வருமே 75 வயதுக்கு மேற்பட்டவர் கள். இந்த நால்வர் வீடுகளுக்கும் சென்ற கட்சியின் புதிய தலைவர் சிறீதரன் அந்த நால்வரின் கால்களையும் தொட்டு, வணங்கி, ஆசீர்வாதம் பெற்றார் என்ற செய்தி அறிந்து நெகிழ்ந்தேன்.

அப்படித் தன் பணியை ஆரம்பிக்க முயலும் ஒருவர் நிச்சயம் சகல தரப்புகளை யும் அரவணைப்பார் என்று நம்பலாம். என்ன, அதன் காரணமாக அவருடன் அணி சேர்ந்தோரே அவரைத் திட்டும் நிலைமை ஏற்பட்டு விட்டமை பரிதாபத் துக்கு உரியது.

நேற்று காலையில் முதலில் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றது. அதற்கு முன் னரும், கூட்ட ஆரம்பத்திலும் சில விடயங் கள் நடந்தன. நேற்றைய கூட்டங்கள் இப் படி கட்டவிழ்வதற்கு அவைதான் காரணம் என்று நான் நினைக்கிறேன்.

கட்சியின் சிரேஷ்ட தலைவர் சம்பந்தன் நேற்றும் முன்தினமும் தொலைபேசியில் சிறீதரனுடனும் சுமந்திரனுடனும் பேசி னார். இருவரும் சேர்ந்து இணக்கமாகப் பொதுக்குழுக் கூட்டத்தை நடத்தி, நிர்வாகி களைத் தேர்வு செய்ய வேண்டும் என்று அவர் அன்புக் கட்டளை இட்டார் எனத் தெரிகின்றது.

இருவரும் அதற்கு ஒப்புக்கொண்டனர். வேறு சில முக்கிய தரப்புக்களும், ஒன்று பட்டு, எல்லோரையும் அரவணைத்து, கூட்டங்களை நடத்தி, நிர்வாகிகளைத் தேர்வு செய்து, இணக்கப்பாட்டை ஏற்படுத் துங்கள் என்று உரிமைக் கட்டளை பிறப் பித்திருந்தன என நான் அறிந்திருந் தேன்.

நேற்று முதலில் மத்திய குழுக் கூட்டம் ஆரம்பமான போது முல்லைத்தீவு பிரதி நிதி பீற்றர் இளஞ்செழியன் மேற்படி சிறீ தரன், சுமந்திரன் இருவருக்கும் ஒரு செம டோஸ் கொடுத்தார்.

"நீங்கள் இருவரும் இணங்கி ஓர் சுமூக மான ஏற்பாட்டுக்கு வந்து, ஒழுங்கமைப்பில் நிர்வாகிகள் தெரிவை நடத்தி முடிக்க வேண்டும். இல்லையேல் கட்சி மாநாடு தொடர்பில் நீங்கள் அளவுக்கு மீறி பல சட்டப் பிழைகளை இழைத்துள்ளீர்கள். நான் நீதிமன்றம் செல்வேன். கட்சிக்காக சுமந்திரன் வாதிட்டாலும் சரி, தவராஜா வாதிட்டாலும் சரி, வேறு யாரேனும் வாதிட் டாலும் சரி, நான் வழக்கில் வெல்வேன். கட்சி கடும் நெருக்கடிகளை எதிர்கொள் ளும்." – என்று துணிவுடன் காட்டமாக எச்ச ரிக்கை விடுத்தார் பீற்றர் இளஞ்செழியன்.

இவ்விடயங்களே ஒன்றுபட்டு கட்சியை முன்னெடுக்க வேண்டுமென்ற நெருக்க டியை எல்லா தரப்பினருக்கும் ஏற்படுத் தின.

கூட்டத்துக்கு முன்னரே சுமந்திரனும் சிறீதரனும் தமக்குள் பேசிக்கொண்டனர். "இணக்கம் வருவதானால் நீங்கள் தலைவராகும்போது நான் பொதுச் செயலாளராக இருந்தால்தான் அது பொருத்தமான விடயமாகும்" – என்று சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

சுமந்திரன் பொதுச் செயலாளராவதில் தமக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்று தெரிவித்த சிறீதரன், ஆயினும் அது கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப் பட வேண்டும் என்று கிழக்குத் தரப்பு வற் புறுத்துவதில் நியாயம் இருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

அப்படியானால் தனக்குப் பதிலாக அப்பதவிக்கு கிழக்கின் மூன்று மாவட் டங்களின் கட்சித் தலைவர்களான கலை யரசன், குகதாசன், சாணக்கியன் ஆகிய மூவரில் ஒருவரைத் தலைவரே பரிந்து ரைத்து செயலாளராக்கலாம் என்று சுமந்திரன் கூறினார். இதையொட்டி சாணக்கியனை கடுமையாக விமர்சித்து சில கருத்துக்களை சிறீநேசனும் வேறு சிலரும் தெரிவித்தனர். அவை பற்றிய விடயங்களை நாளை பார்ப்போம்.

இறுதியில் குகதாசனை செயலாளராக் கும் முடிவு எட்டப்பட்டது. ஏனைய பதவிக ளுக்கான பிரேரிப்புகளும் ஏகமனதாக – இணக்கமாக – பேசிக் கலந்தாய்ந்து செய்யப்பட்டன.

அங்கு பேசி இணக்கம் காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிர்வாகி கள் பட்டியலைத் தயாரித்து, அதனைப் பொதுக்குழுவில் சமர்ப்பித்து, அங்கீ காரம் பெறுவது என முடிவு செய்யப்பட் டது.

ஆனால் அங்கு அந்த முடிவுகளுக்கு இணங்கிப் போன சிறீநேசன் போன் றோர் பின்னர் பொதுக்குழுவில் அது சமர்ப்பிக்கப்பட்ட சமயம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால் வாக்கெடுப்பு நடைபெற வேண்டிய தேவை இருந் தது.

வாக்கெடுப்பெல்லாம் நடந்து, சுமூக மான முடிவு எட்டப்பட்டு, கூட்டம் முடிவ டைந்த பின்னர், மாலையில் தம்மைச் சுற்றி நின்று சத்தமிட்ட சில தரப்புகளுக்கு அஞ்சி இன்று நடைபெற வேண்டிய மாநாடு ஒத்தி வைக்கப்படுகின்றது, அது அடுத்த வாரம் அளவில் நடக்கும் என்ற ஓர் அறிவிப்பைத் தம்பாட்டில் விடுத்தார் மாவை சேனாதிராஜா. இவ்விடயம் தொடர்பில் மாவைக்குள்ள அதிகாரம் பற்றிய விடயங்கள் விளக்கமாக இன் றைய முற்பக்கத் தலைப்புச் செய்தியிலும் ஆசிரியர் தலையங்கத்திலும் விரிவாக ஆராயப்பட்டு இருக்கின்றன.

இன்றைய மாநாட்டுத் திகதிக்கு பின் னர் மாவை சேனாதிராஜா வெளிநாடு பறக்க விருக்கிறார். அவரின் இரண்டா வது மகனுக்கு பெப்ரவரி நாலாம் திகதி சிங்கப்பூரில் திருமண பதிவு இடம்பெற இருப்பதாகத் தெரிகிறது. அடுத்து வரும் நாள்களில் அவர் சிங்கப்பூர் பறந்தால், அங்கிருந்து திரும்ப சில வாரங்களாகும். இன்று நடைபெற வேண்டிய மாநாடு நடக்காமல் ஒத்திவைக்கப்பட்டால் தாம் சிங்கப்பூர் சென்று திரும்பி வந்து, புதிய திகதியில் அதை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடக்கும் வரை தாமே கட்சித் தலைவராக நீடிப்பார் என்று தவறான கற்பிதம் செய்து கொண்டுதான் மாவை சேனாதிராஜா இந்த அறிவிப்பை கொடுத் திருக்கின்றார் போலும்.

கட்சி மாநாட்டை நடத்தாமல் இழுத்த டித்து பதவியில் தொடர்வதற்கு அவர் காட்டும் நப்பாசையை இந்தப் பத்தியில் நீண்ட காலமாக நான் சுட்டிக்காட்டி வரு கிறேன். அதன் ஓர் அங்கம்தான் – மாவை யின் முயற்சிதான் – நேற்று அரங்கேறி இருக்கின்றது என்று நான் நினைக்கி றேன்.

மத்திய குழுவில் இணங்கிய விட யத்தை ஓரிரு மணித்தியாலங்களில் நடந்த பொதுக்குழுக் கூட்டத்தில் மறுத் துரைத்து, அதற்கு மாறான நிலைப் பாட்டை எடுத்த சிறீநேசன் போன்றவர் களை கட்சியின் செயலாளராக்கி, கட்சி யைக்கொண்டுநடத்துவது சிக்கலாக இருக் கும் என்பது நேற்று வரை அவரோடு அணி சேர்ந்து இருந்த சிறீதரனுக்கு இப்போது நன்கு புரிந்து இருக்கும் என எதிர்பார்க்கலாம். திருகோணமலையின் இன்னொரு நண்பர் ஒரு கொசுறுத் தகவ லைச் சொன்னார்:–

"நீங்கள் யோகேஸ்வரனை காட்டமாக விமர்சிக்கும் பாணியில் எழுதியிருக்கிறீர் கள். ஆனால் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று முற்பகல் வரை இணக்க மான நிலைப்பாட்டை ஏற்படுத்தி, கிழக் கில் குகதாசனையாவது பொதுச் செயலா ளராக்கி, நிலைமையை சமூகமாக்கு வதற்கு யோகேஸ்வரன் கடுமையாக உழைத்தார்" – என்றார் அவர்.

சிறீதரனும் சுமந்திரனும் இன்று மதியம் ஒன்றாகச் சேர்ந்து மாவை சேனா திராஜாவின் வீட்டுக்கு நேரில் சென்று, இப்போது உள்ள நிலைமைகளை விளக்கி, ஏற்கனவே தேர்ந்தெடுத்து அறி விக்கப்பட்ட நிர்வாகிகளை கொண்டு கட்சியை ஒழுங்காக நடத்துவதற்கான ஏற்பாடுகளை – வழிவகைகளை – செய் வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே சமயம் இந்தப் பிரச்சினையை முடித்துக் கொண்டு நாளை கிழக்கிற்கு – குறிப்பாக மட்டக்களப்புக்கு – செல்லும் சிறீதரன் அங்கு நிர்வாகிகள் தெரிவில் இணக்க ஏற்பாட்டைச் செய்தமைக்காக சீற்றங் கொண்டிருக்கும் தமது அணி உறுப்பினர்களை சமாளித்து அவர்களை வழிக்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபடுவார் எனத் தெரிகிறது.

## வாவியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மீட்கப்பட்ட நபர் நாவலப்பிட்டி கெடபுல்லா பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய இராமன் பத்மநாதன் என அடையாள அட்டையை அடிப்படையாக வைத்து பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்ட நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

## ரூ.500 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கூறப்படும் நபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்று வருடங்களாக தலைமறைவாகியிருந்த நிலையிலேயே, பிலிமத்தலாவ பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஒரு பட்டதாரி என்பதுடன் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். அத்துடன், தென்மாகாணத்தில் உள்ள விகாரையொன்றில் உயர் பதவியையும் அவர் வகித்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தொலைக்காட்சி நடிகை ஒருவருடன் முறையற்ற தொடர்பு வைத்திருந்தார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவரது பிரமிட் வியாபாரத்தில் எவரேனும் முதலீடு செய்திருந்தால் முறையிடலாம் எனவும், இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தமிழரசு நிர்வாகிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இவ்விடயங்களை கட்சியின் வட்டாரங்கள் தெரியப்படுத்தின.

கட்சியின் யாப்பின் விதி 13 (உ) 1. பிரிவின் பிரகாரம் தேசிய மாநாட்டுக்கு முதல் நாள் நடைபெறும் மத்திய குழுக் கூட்டத்துடன் கட்சியின் தலைமைப் பொறுப்பு புதிய தலைவரிடம் வந்து விடும். இது யாப்பின் மிகத் தெளிவாக உள்ளது.

அதன் பின்னர் நடைபெறும் பொதுக் குழுக் கூட்டத்துக்குப் புதிய தலைவரே தலைமை வகிப்பார்.

எனவே, நேற்றுக் காலையில் திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துடன் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜாவின் தலைமைத்துவம் முடிவுக்கு வந்துவிட்டது.

அதன் பின்னர் மதிய போசன இடைவேளைக்கு முன்னரும், அதன் பின்னர் மாலை வரையிலும் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்ட நடவடிக்கைகள், நிர்வாகிகள் தெரிவு, நடக்கவிருக்கும் மாநாடு குறித்து எல்லாம் ஏதேனும் முடிவை தலைவர் என்று அறிவுக்கு அதிகாரம் மாவை சேனாதிராஜாவுக்குக் கட்சியின் யாப்பின்படி கிடையவே கிடையாது.

அவற்றை அறிவிக்கும் முழு அதிகாரம் புதிய தலைவர் சிறீதரனுக்கே உண்டு.

நேற்று இடம்பெற்று, இறுதி செய்யப்பட்ட நிர்வாகிகள் தெரிவு இரத்து என்று கட்சியின் தலைவர் சிறீதரன் எந்தக் கட்டத்திலும் அறிவிக்கவோ, கூறவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று சிறீதரனும் சுமந்திரனும் கூட்டாக மாவை சேனாதிராஜாவை யாழ்ப்பாணத்தில் சந்தித்து இந்த விடயங்களை அவருக்கு நேரில் எடுத்துரைத்து, நிலைமைகளைத் தெளிவுபடுத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று நடைபெறவிருந்து இரத்துச் செய்யப்பட்ட தேசிய மாநாடு நிகழ்வு ஒரு சம்பிரதாயபூர்வ வைபவம் என்பதாலும், அது நடைபெறாதமையால் கட்சிச் செயற்பாடுகளுக்கு எந்தப் பங்கமும் நேராது என்பதாலும் அது பெரும்பாலும் நடத்தப்படாமல் கைவிடப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்குப் பதிலாக புதிய தலைவர் சிறீதரன், பொதுச்செயலாளர் குகதாசன் ஆகியோரடங்கிய கட்சியின் புதிய நிர்வாகிகளை வரவேற்கும் ஒரு நிகழ்வு எல்லோரையும் ஒன்றிணைத்து நடத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று முறைப்படி தெரிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட புதிய நிர்வாகிகள் தத்தமது பணிகளை நல்ல நாளில் ஆரம்பிப்பர் என்றும் கூறப்பட்டது.






# 19 ஆவது தடவை வெளிநாட்டுப் பயணத்துக்கு தயாராகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி வெளிநாடுகளுக்குச் செல்கிறார் எனக் கடந்த வாரம் எதிர்க்கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்தன.

இந்த நிலையில் தமது 17 மாத ஆட்சிக் காலத்தில் தமது 19 ஆவது வெளிநாட்டுப் பயணத்துக்குத் தயாராகி விட்டார் அவர் என்று கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியேற்றதன் பின்னர் கடந்த 17 மாதங்களில் 18 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார் என நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கருத்துகளை முன்வைத்திருந்தனர்.

இந்த செலவுகள் மற்றும் ஜனாதிபதியின் ஏனைய செலவினங்களுக்காக வரவு – செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு அப்பால் 200 கோடி ரூபாவை ஜனாதிபதி மேலதிகமாக ஒதுக்கியுள்ளார் என அநுரகுமார திஸாநாயக்க கூறியிருந்தார்.

ஜனாதிபதி கடந்த 13ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை சுவிட்சர்லாந்து மற்றும் உகண்டா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த வேளையிலேயே நாடாளுமன்றத்தில் இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

இப்போது, ஜனாதிபதியின் 19ஆவது வெளிநாட்டுப் பயணம் தொடர்பிலான விவரங்கள் குறித்துத் தெரியவருகிறது. இம்முறை அவர் ஆஸ்திரேலியாவை தெரிவுசெய்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பெர்த்தில் பெப்ரவரி 9 ஆம் திகதி நடைபெறும் காலநிலை மாற்றம் தொடர்பிலான மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

# கிராம உத்தியோகத்தர்கள் தெரிவுக்கான பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகின

வெற்றிடமாக காணப்பட்ட 2,002 கிராம உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகத்தேர்வுக்கு தகுதி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கிராம உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்காகக் கடந்த வருடம் டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி இடம்பெற்ற போட்டிப் பரீட்சைக்கு அமைய 4 ஆயிரத்து 232 பேர் நேர்முகத்தேர்வுக்கு தகுதிபெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நேர்முகத்தேர்வுக்கு தகுதி பெற்றவர்கள் தொடர்பான தகவல்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

தற்போது தெரிவானவர்களிடம் நேர்முகத்தேர்வின் பின்னர் அவர்கள் மிக விரைவில் பணிகளில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சனத் நிஷாந்தவின் உயிரிழப்புச் சம்பவம்:

# ஜீப் சாரதியின் கையடக்கத் தொலைபேசி குற்றப் புலனாய்வாளர்களிடம் கையளிப்பு





கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன(ஜீப்) விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் சாரதியின் கையடக்க தொலைபேசி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தை அடுத்து சந்தேகநபரான சாரதியின் கையடக்கத் தொலைபேசி கந்தானை பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில், மேலதிக விசாரணைகளுக்காக மேற்படி கையடக்கத் தொலைபேசி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த சாரதி விளக்கமறியல் உத்தரவின் கீழ் தற்போது ராகமை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## யாப்பு தெரியாத மாவை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு இன்று நடைபெறாது.

திருகோணமலையில் இன்று நடந்திருக்க வேண்டிய அந்தச் சம்பிரதாய பூர்வ அமர்வு, இன்னும் தன்னைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்று கற்பனை பண்ணிக் கொண்டிருக்கும் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜாவினால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக முறையற்ற விதத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு, மாநாடு நடத்தப்பட முடியாமல் தள்ளிப் போயிருக்கின்றது.

தமது கட்சியின் யாப்பையே புரியாதவராக - விளங்காதவராக - அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருக்கும் மாவை சேனாதிராஜா செயற்படுகின்றமைதான் இக்குழப்பங்கள் எல்லாவற்றிற்கும் பிரதான காரணம். அதை வெளிப்படையாகச் சுட்டிக் காட்ட வேண்டிய தேவை - கட்டாயம் - எழுந்துள்ளது.

கட்சி யாப்புக்கும் முரணாக 2014 முதல் ஒரே ஒரு தேசிய மாநாட்டை இடையில் நடத்திக் கொண்டு பத்து வருடங்கள் கட்சித் தலைவராகப் பதவி சுகம் அனுபவித்தவர் அவர்.

கட்சியின் தேசிய மாநாட்டுக்கு முன்னர் யாப்புப்படி மாவட்ட, தொகுதி, மூலக் கிளைகளின் கூட்டங்களை ஒழுங்காக அவரால் கூட்டுவிக்க முடியவில்லை. அல்லது அதற்கு அவர் முயலவே இல்லை. அவற்றை கூட்டா விட்டால் தாம் தலைமை பதவியில் கட்டுமட்டின்றித் தொடரலாம் என்ற நப்பாசை இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

கட்சி யாப்புக்கு மாறாக பிரதேச செயலர்கள் பிரிவுகள் தோறும் கிளைக்கு ஐந்து பிரதிநிதிகள் என்று எண்ணுக்கணக்கில்லாமல் உறுப்பினர்களை கூட்டி, பொதுக்குழுவைச் சாம்பாராக்கும் திசையில் மத்திய குழு செயல்படுவதற்கு இடமளித்துப் பார்த்திருந்த தலைவர் அவர்தான். இவ்விடயத்தில் கட்சி உறுப்பினர் யாரேனும் நீதிமன்றுக்குப் போனால் எல்லாத் தெரிவுகளுமே தவறு என்று நீதிமன்றம் தீர்மானிக்கவும் தொண்ணூறு வீதம் வாய்ப்பு உண்டு. அத்தகைய விதத்தில்தான் இந்தத் தேசிய மாநாட்டுக்கு முந்திய ஏற்பாடுகளை மாவை சேனாதிராஜா தலைமையிலான நிர்வாகம் முன்னெடுத்திருக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை.

இப்போதும் கூட, நேற்றைய பொதுக்குழு கூட்டங்களின் குழப்பத்தின் போது தீர்மானம் எடுக்கும் தலைமை அதிகாரம் யாரிடம் உள்ளது என்று தெரியாமல் விடயத்தை போட்டடித்துக் குழப்பி இருக்கின்றார் மாவே சேனாதிராஜா.

இன்று நடைபெறவிருந்த கட்சியின் தேசிய மாநாடு சம்பிரதாயபூர்வ வைபவம் ஒன்றே. அதில் தலைமைத்துவம் கைமாறுவது கூட ஓர் அடையாள நிகழ்வு மட்டும்தான்.

உண்மையில் கட்சியின் தலைமைத்துவம் சட்ட ரீதியாக எப்போது கைமாறுகின்றது என்பதைத் தமிழரசுக் கட்சியின் யாப்பு தொட்டத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது. அதுவும் மாவை சேனாதிராஜாவுக்கு தெரியாமல் இருந்தமைதான் இந்தக் குழப்பங்களுக்குப் பிரதான காரணம்.

தமிழரசுக்கு கட்சியின் உத்தியோகத்தர்களின் பதவிக்காலம் பற்றிய விடயத்தை கட்சி யாப்பின் விதி 13 (உ)1 - திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துகின்றது.

"கட்சியின் தலைவர் அடுத்து வரும் தேசிய மாநாட்டுக்கு முதல் நாள் வரையும் தலைவர் ஆவார். முதல் நாள் நடைபெறும் விடய ஆலோசனை சபையின் (மத்திய குழுவின்) ஆரம்பத்தில் புதிய தலைமையிடம் தமது பொறுப்புகளை அவர் கையளிப்பார்" என்று தெளிவாக அந்த யாப்பு விதி கூறுகின்றது.

அதன்படி நேற்றுக் காலை திருகோணமலையில் நடந்த மத்திய குழுவின் கூட்டத்தின் ஆரம்பத்துடனேயே மாவை சேனாதிராஜாவின் பதவிக்காலம் முடிவடைந்து விட்டது.

நேற்று திருகோணமலையில் மதிய போசன இடைவேளைக்கு முன்னரும், அதன் பின்னர் மாலை வரையிலும் நடைபெற்று முடிந்த கட்சியின் பொதுக்குழுவுக்கு கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறீதரனே தலைவர். அவரே அதனை நடத்தினார் என்பதும் வெளிப்படையானது. அங்கு நிர்வாகிகள் தெரிவு எல்லாம் முடிவுற்று, அது பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு, அடுத்த நாள் - அதாவது இன்று - காலை 10 மணிக்கு தேசிய மாநாட்டுக்காகக் கூடுவோம் என்று மாவையரும் சேர்ந்து அறிவித்துவிட்டு, கூட்டம் முடிந்து வெளியே வந்து நாளைய (இன்றைய) தேசிய மாநாடு ஒத்திவைக்கப்படுகின்றது என்று மாவை சேனாதிராஜா தன் பாட்டில் தனக்கு அதிகாரம் இல்லாத அறிவிப்பை விடுத்து, குழப்பி இருக்கின்றார்.

இந்த அறிவிப்பை விடுவதற்கு மாவை சேனாதிராஜாவுக்கு அதிகாரம் இல்லை. அறிவிக்கும் போது அவர் கட்சியின் தலைவர் அல்லர்.

அத்தோடு கட்சியின் மத்திய குழு கூடித் தீர்மானித்த மாநாட்டுத் திகதியை ஒத்திவைப்பதாயின், மத்திய குழுவைக் கூட்டித்தான் அதனை செய்திருக்க வேண்டும்.

பதவி முடிந்து வெளியேறிவிட்ட தலைவர் நிலையில் இருந்து, இந்தக் கைங்கரியத்தை தம்மிஷ்டப்படி செய்து எல்லாவற்றையும் குழப்பியடித்திருக்கின்றார் மாவை சேனாதிராஜா.





# இளையராஜா மகள் பவதாரிணி உடல் நல்லடக்கம் 'மயில் போல பொண்ணு' பாடலை பாடிய உறவுகள்

இளையராஜாவின் மகளும், பின்னணி பாடகியுமான பவதாரிணியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இதற்காக அவரது உடலை தூக்கிச் சென்ற உறவினர்கள் அவரின் தேசிய விருது பெற்ற பாடலை பாடியபடியே கொண்டு சென்றனர்.

பவதாரிணியின் உடல் தேனி அருகே உள்ள லோயர் கேம்ப் பகுதியில் உள்ள இளையராஜாவின் தாயார் மற்றும் மனைவியின் நினைவிடங்களுக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

புற்றுநோய் காரணமாக இலங்கையில் ஆயுர்வேத சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 25 ஆம் திகதி மாலை காலமானார். அவரின் உடல் நேற்று முன்தினம் விமானம் மூலம் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்று மாலை வரை மக்கள் அஞ்சலிக்காக தியாராய நகரில் உள்ள இளையராஜாவின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இதன்போது, மத்திய அமைச்சர் எல் முருகன், தமிழக அமைச்சர் உதயநிதி, திரைப்பிரபலங்களான சிவக்குமார், கார்த்தி, விஷால், வெங்கட் பிரபு, குட்டி பத்மினி, ராதிகா, விஜய் ஆண்டனி, சேரன், லிங்குசாமி, பரத்வாஜ், மோகன் ராஜா, மனோஜ் பாரதிராஜா, ராமராஜன், ஆனந்தராஜ், நிழல்கள் ரவி, சுஜாதா, ஸ்வேதா மோகன், சூரி, ஆர்.கே செல்வமணி, பேரரசு, பாக்யராஜ், சுஹாசினி, இயக்குனர்கள் எழில், அமீர், ராம், சந்தான பாரதி, வெற்றிமாறன், சுரேஷ் காமாட்சி, சுதா, பிரியா, இளன், இசையமைப்பாளர் தினா, பாடகர்கள் உன்னி கிருஷ்ணன், ஏ.ஆர்.ரஹ்மான் மகன் ஏ.ஆர்.ஆர்.அமீன், மிர்ச்சி சிவா, வெங்கட்பிரபு அணியினர் உள்ளிட்டோர் பவதாரிணியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் பவதாரிணியின் உடலை இளையராஜாவின் சொந்த ஊரான தேனிக்கு பிரத்யேக அமரர் ஊர்தி மூலம் நேற்று முன்தினம் இரவு எடுத்துச் சென்றனர்.

நேற்று காலை அவரது உடல் தேனிக்கு கொண்டு செல்லப்பட்டது . கார்த்திக் ராஜா, யுவன் ஷங்கர் ராஜா, வெங்கட் பிரபு, பிரேம்ஜி அமரன் மற்றும் இளையராஜாவின் உறவினர்களும் தேனிக்கு சென்றனர் .

விமானம் மூலம் மதுரைக்கு சென்ற இளையராஜா பின்பு காரில் நேற்று பிற்பகலில் லோயர்கேம்ப் சென்றார். இறுக்கத்துடன் மனவேதனையில் இருந்த இளையராஜாவுக்கு பாரதி ராஜா ஆறுதல் கூறினார்.

தேனி, லோயர்கேம்ப்பில் உள்ள இளையராஜாவின் பண்ணை தோட்டத்தில் பவதாரிணி உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கு டிரம்ஸ் சிவமணி, நடிகர்கள் ஜோன் விஜய், அபி சரவணன், இயக்குனர் அமீர் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தேனி எம்.பி. ரவீந்திரநாத், நடிகர்கள் அரவிந்த், கிருஷ்ணா, இயக்குநர் அமீர், பேராசிரியர் ஞானசம்பந்தன் உள்ளிட்ட பலரும் பவதாரிணியின் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். பவதாரிணியின் உடலை பார்த்ததும் இயக்குநர் பாரதிராஜா கதறி அழத் தொடங்கினார்.

பின்னர் பவதாரிணி உடல் சாந்தி அடைய ஓதுவார்கள் மூலம் திருவாசகம் பாடப்பட்டது. தொடர்ந்து இறுதிச்சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இறுதிச்சடங்குகள் அனைத்தும் முடிந்த நிலையில் உறவினர்கள் பவதாரிணியின் உடலை தூக்கியபடி, அவரின் தேசிய விருது பெற்ற பிரபல பாடலான 'மயில் போல பொண்ணு ஒன்னு. கிளிபோல பேச்சு ஒன்னு' என்ற பாடலை பாடியபடி சென்றனர்.

இதையடுத்து இளையராஜாவின் அம்மா சின்னத்தாய் மற்றும் மனைவி ஜீவாவின் நினைவிடத்திற்கு இடையில் பவதாரிணியின் உடல் மாலை 5 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

விரைவில் இவருக்கும் மணிமண்டபம் கட்டுவதற்கான பணிகள் நடைபெறும் என இளையராஜாவின் உறவினர்கள் தெரிவித்தனர்.





# நடிகர் விஜய் கட்சி தொடங்குவது ஆரோக்கியமான அரசியலாக இருக்கும்

## நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கருத்து

"நடிகர் விஜய் கட்சி தொடங்குவது ஓர் ஆரோக்கியமான அரசியலாக இருக்கும்" என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

பாளையங்கோட்டையில் திருநெல்வேலி, தென்காசியில் உள்ள 10 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான நாம் தமிழர் கட்சியின் நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்பின்னர் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

"இந்திய பொருளாதாரம் சீரழிந்துள்ளது. தி.மு.க. பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சியாக இருந்தபோது இந்தி தெரியாது போடா என்றும் ஆளுங்கட்சி ஆனவுடன் இந்தி தெரியும் வாடா என தெரிவிப்பதுதான் தி.மு.கவின் கொள்கை. தற்போது கேலோ விளையாட்டு போட்டிக்குகூட தமிழில் பெயர் வைக்க முடியாமல்தான் தி.மு.க. உள்ளது. மோடி இதுவரை எந்த மாநில விளையாட்டு துறை அமைச்சரையும் சந்திக்கவில்லை. ஆனால் தமிழகத்தில் உள்ள விளையாட்டு துறை அமைச்சரை மட்டும் சந்தித்துள்ளார். இருவருக்கும் இடையே ஒரு நல்ல உறவு இருப்பது இதன் மூலம் தெரிய வந்துள்ளது.

நடிகர் விஜய் அரசியல் கட்சி தொடங்குவது ஓர் ஆரோக்கியமான அரசியலாக இருக்கும். அண்ணன்(சீமான்) மட்டும்தான் தமிழகத்தில் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார் அவருக்கு உறுதுணையாக இருப்போம் என அவர் நினைத்திருப்பார். தமிழகத்தில் கொண்டு வரப்பட்ட எந்த தீய திட்டத்திற்கும் நேரடியாக சென்று பார்த்தால் அதில் கருணாநிதி பெயர் இருக்கும். அநாகரிக அரசியலின் ஆரம்ப புள்ளியே அதுதான்." – என்றார்.



# நடிகர் விஜயகாந்த் சமாதியில் ஒரே நாளில் 50,000 பேர் அஞ்சலி

நடிகர் விஜயகாந்த் சமாதியில் ஒரே நாளில் 50 ஆயிரம் பேர் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

பிரபல நடிகரும் அரசியல்வாதியுமான விஜயகாந்த் கடந்த 28 ஆம் திகதி உயிரிழந்தார்.

உடல்நல குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் மரணம் அடைந்ததை தொடர்ந்து ஏராளமானோர் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிலையில், விஜயகாந்த் உயிரிழந்து அடைந்து இன்றுடன் 1 மாதம் பூர்த்தியாகின்றது.

இதற்கமைய நேற்று முன்தினம் விஜயகாந்த் சமாதியில் அதிகமானோர் திரண்டு அஞ்சலி செலுத்தி உள்ளனர்.

நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 50 ஆயிரம் பேர் விஜயகாந்த் சமாதியில் அஞ்சலி செலுத்தியிருந்தனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், அஞ்சலி செலுத்த வருபவர்கள் பசியோடு செல்லக்கூடாது என்பதற்காக தினமும் அன்னதானம் வழங்கப்பட்டுவருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.



# அமெரிக்க கார்னி போர்க்கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்!

ஏடன் வளைகுடா பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட அமெரிக்காவின் கார்னி போர்க்கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சி யாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என செய்திகள் வெளி யாகியுள்ளன.

அமெரிக்கா, பிரித்தானியாவின் தாக்குதலுக்கு பதிலளிக்கும் வகையிலும் பலஸ்தீனிய மக்களுக்கு ஆதரவாகவும் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என இந்த தாக்குதல் குறித்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கூறியிருந்தனர்.

மத்திய கிழக்கு கடல் பகுதியில் தொடர்ந்து வணிக கப்பல்களை தொந்தரவு செய்து வரும் ஹவுதி கிளார்ச்சியாளர் கள் தற்போது அமெரிக்காவின் போர்க்கப்பல் மீது நடத்தி யுள்ள இந்தத் தாக்குதலானது, கடந்த சில தசாப்தங்களில் இடம்பெற்ற மிகப்பெரிய தாக்குதலாக பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், நேற்று அதிகாலை செங்கடலை குறி வைத்து தாக்குதல் நடத்த தயாராக இருந்த ஹவுதி கப்பலின் ஏவுகணைக்கு எதிராக அமெரிக்கப்படைகள் எதிர் தாக்கு தல்களை நடத்தியுள்ளன.

ஹவுதியின், துறைமுக நகரான ஹொடெய்டா அருகே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது எனத் தெரிவித்துள்ள நிலை யில், தாக்குல்களில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து எந்த தக வலும் இன்னும் தெரிவிக்கப்படவில்லை.

இஸ்ரேல்– ஹமாஸ் அமைப்பினர் இடையே உக்கிர மடைந்து வரும் போரில் ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஹமாசுக்கு ஆதரவாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த செங்கடலில் பயணிக்கும் வணிக கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இதையடுத்து ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா, பிரித்தானியா இணைந்து வான்வழி தாக்குதலை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் ஏடன் வளைகுடா பகுதியில் சென்ற பிரித்தானியாவை சேர்ந்த எண்ணை கப்பல் மீதும் ஏவுக ணைகளை வீசி ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி னர்.

பிரித்தானியாவின் மார்லின் லுவாண்டா கப்பல், செங் கடலை கடந்து ஏமன் வளைகுடாவில் சென்றபோது ஏவுக ணையால் தாக்கப்பட்டது, இதனால் கப்பலில் தீப்பிடித்தது. அதனை கப்பல் ஊழியர்கள் போராடி அணைத்துள்ள னர்.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் இருந்து ஹவுதி கிளர்ச்சியா ளர்கள் வணிக கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது முதன்முறையாக அமெரிக்கா வின் போர்க்கப்பலை குறிவைத்து தாக்குதலை நடத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்கு ஈரானில் துப்பாக்கி சூடு: ஒன்பது வெளிநாட்டவர்கள் பலி



தென்கிழக்கு ஈரானில் பாகிஸ்தான் எல்லைக்கு அருகே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒன்பது வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் சிஸ்தான் – பலு சிஸ்தான் மாகாணத்தில் உள்ள சரவன் பகுதியிலுள்ள வீடொன றில் ஈரானியர் அல்லாத ஒன்பது பேர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என ஈரானிய செய்தி நிறுவனம் தெரிவித் துள்ளது.

இந்த தாக்குதலுக்கு எந்தவொரு குழு அல்லது தனிநபர் கள் பொறுப்பேற்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

கடந்த 18 ஆம் திகதியன்று ஈரான் தனது பிராந்தியத்தில் தாக்குதல்களை நடத்திய இரண்டு நாள்களுக்குப் பின்னர், ஈரானில் உள்ள போராளிகளின் இலக்குகள் மீது பாகிஸ் தான் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

ஈரான் மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே பதற்றம் நில விவரும் நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.



# சிறீதரனின் புதிய பயணத்தின் முன்னாலுள்ள சவால்கள்?





புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய அரசியலின் தாய்க் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பொறுப்பேற்றுள்ளார். இன்று ஞாயிறுக்கிழமை திருகோணமலையில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் சிறப்புப் பேருரையை நிகழ்த்தி, தலைவர் பொறுப்பை சிறீதரன் ஏற்கவிருந்தார். எனினும் சில, பல காரணங்களால் அந்த பொது அமர்வு மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அவர் கட்சியின் தலைவராக நீடிப்பார். திருகோணமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைத் தோற்கடித்து அவர் வெற்றி பெற்றிருந்தார்.

தமிழ்த் தேசிய அரசியலுக்குள் சிறீதரனும் சுமந்திரனும் சமகாலத்தில் வந்தவர்கள். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள். கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் ஏனைய வேட்பாளர்கள் ஓர் அணியிலும் இவர்கள் இருவரும் இன்னொரு அணியாகவும் நின்று வாக்குச் சேகரித்திருந்தார்கள். மற்றைய அணியினர் அனைவரும் தோல்வியடைய, இவர்கள் இருவரும் வெற்றிபெற்றிருந்தனர். சிறீதரன் தன்னை கடும் தமிழ்த் தேசியவாதியாக முன்னிறுத்துபவர்.சுமந்திரன், தமிழ்த் தேசியவாதியாக தன்னைக் கூறிக் கொண்டாலும் மென்வலு அரசியலில் ஆர்வமுள்ளவர். அதனை அவர் 2015 பொதுத் தேர்தல் காலத்தில் வெளிப்படையாக அறிவிக்கவும் செய்திருக்கிறார். இந்த விடயம்தான், சுமந்திரனை தலைவருக்கான போட்டியில் தோற்கடித்திருக்கின்றது. தமிழரசுக் கட்சிக்கு கடும் தமிழ்த் தேசியம் பேசும் ஒருவர் அல்லது அப்படியான அணுகுமுறையுள்ள ஒருவர் தலைவராக வேண்டும் என்று கட்சியின் பெரும்பான்மையான பொதுக்குழு உறுப்பினர்கள் விரும்பியிருக்கிறார்கள். அதேவேளை, சுமந்திரன் இல்லாத தமிழரசுக் கட்சியை பொதுக்குழு உறுப்பினர்கள் விரும்பவில்லை என்பதை அவருக்கு கிடைத்த கணிசமான வாக்குகள் பிரதிபலிக்கின்றன. அத்தோடு, தேர்தலில் சிறீதரன் வெற்றிபெற்ற அறிவிப்பு வெளியானதும், கை கொடுத்து சுமந்திரன் அவரை வாழ்த்தினார். அப்போது, பொதுக்குழு உறுப்பினர் ஒருவர் வெளிப்படுத்திய “...சிறீதரன் எங்களின் இதயம், சுமந்திரன் எங்களின் மூளை...” என்ற கோசமும், அதனைத் தொடர்ந்து எழுந்த கரகோசமும் கவனிக்கத் தக்கது.



கடும் தமிழ்த் தேசியவாத முகம் தமிழரசுக் கட்சிக்கு வேண்டும் என்பது, பலதரப்புக்களின் தொடர் விருப்பமாகும். தமிழரசுக் கட்சியை தமிழீழ விடுதலைப் புலிகள் மீட்டெடுத்துக் கொடுத்தது முதல் அதன் தலைவராக இருந்த

தொடர்ச்சி▼



# சிறீதரனின் புதிய பயணத்தின் முன்னாலுள்ள சவால்கள்?

தொடர்ச்சி▲

பெருந்தலைவர் இரா.சம்பந்தன், தன்னை கடும் தமிழ்த் தேசியவாதியாகக் காட்டிக் கொண்டவரல்லர். தென் இலங்கையோடும் சர்வதேசத்தோடு விட்டுக் கொடுப்புக்களோடு உரையாடக்கூடிய நெகிழ்வுப் போக்குள்ள தலைவராகவே அவர் தன்னை வெளிப் படுத்தி வந்திருக்கிறார். அதுவும், முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான காலத்தில் தமிழ்த் தேசிய அரசியல் என்பது ஒட்டுமொத்தமாக சம்பந்தனின் தலைமைத்துவத்தின் கீழ் சென்றதும், அவர் தன்னை மென்வலு அரசியலின் பக்கத்தில் நிலைநிறுத்திக் கொண்டார். அவருக்குப் பின்னால், தலைவராக வந்த மாவை சேனாதிராஜா சம்பந்தனின் பினாமி போன்றவர். அவரிடத்தில் முடிவெடுக்கும் அதிகாரங்கள் இருக்க வில்லை. ஒரு கட்டம் வரையிலும் சம்பந்தன் சொல் வதைச் செய்யும் கருவியாகவும், பிறகு சுமந்திரனின் முடிவுகளுக்காக காத்திருக்கும் ஒருவராகவும் மாறி யிருந்தார். கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் மாத்திரமே மாவை சுமந்திரனுக்கு எதிரான கருத்துக்களை கூறியிருக்கிறார். மற்றப்படி, தமிழரசுக் கட்சியின் முடிவுகள் என்பது சம்பந்தன், சுமந்திரன் தரப்பினரால் மாத்திரமே எடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படித்தான் தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பும் உணர்ந்து கொண்டிருக்கின்றது. ஆக, விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் முகம் என்பது கடும் தமிழ்த் தேசியவாதிகள் என்ற கட்டத்தைத் தாண்டிய மென்வலு முகமாகவே இருந்திருக்கின்றது. அப்படியான சூழலில் கடும் தமிழ்த் தேசியவாத முகம் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சிறீதரனைத் தலைவராகத் தேர் தெடுந்திருக்கிறார்கள்.

இதிலுள்ள முரண்நகை என்னவென்றால், சம்பந்தனின் அரசியல் வாரிசு சுமந்திரன், அவரின் நிலைப்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுக்கப் போகிறார் என்று நம்பப்பட்டது. ஆனால், தலைவருக் கான தேர்தலில் சுமந்திரனைப் புறந்தள்ளி சிறீதரனை சம்பந்தன் ஆதரித்திருக்கிறார். தலைவர் தேர்தலுக்கான இறுதிக் கணம் வரையில், எப்படியாவது சிறீதரன் வென்றுவிட வேண்டும் என்பதில் சம்பந்தன் கடுமையாக உழைத்திருக்கிறார். கடும் தமிழ்த் தேசியவாத முகத் தைத் தேர்தெடுப்பதற்காக, மென்போக்குள்ள தலைவர் என்று விமர்சிக்கப்பட்ட சம்பந்தன் முயன்றிருக்கிறார் என்பது கவனிக்கப்பட வேண்டியது.

தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது முதல், 'வாரிசு அரசியல் – வாழ்நாள் தலைவர்' என்ற ஜனநாயக விரோத தன்மைகள் கட்சியை ஆக்கிரமித்துவிடக்கூடாது என்பதற்காக கட்சியின் மரபில் தலைவர் ஒருவர் தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் மாத்திரமே அந்தப் பதவியை தொடர்ந்து வகிக்க முடியும் என்ற ஏற்பாடு உள்ளது. அதுபோல, மத்திய குழுவிடம் கணிசமான அதிகாரம் இருக்கின்றது. எழுந்தமானமாக முடிவுகளை கட்சித் தலைவரோ, செயலாளரோ எடுக்க முடியாது. ஆனாலும் கடந்த காலத்தில் சம்பந்தனும் சுமந்திரனும் எடுத்த முடிவுகளே கட்சியின் மத்தியகுழு அங் கீகாரத்தோடு பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டிருக் கின்றன. மத்தியகுழு அங்கீகரிக்காத முடிவுகளை கட்சியின் சார்பில் பேசவல்ல தான் ஒருபோதும் எடுத்ததில்லை என்று சுமந்திரன் கூறுகிறார். கட்சிக்குள் கூட்டுப்பொறுப்பை ஏற்பதற்கு சிலர் பல காரணங் களுக்காக தயாராக இருப்பதில்லை. அதனால், அனைத்தும் சம்பந்தனும் தானும் எடுத்த முடிவுகள் என்பது மாதிரியான நிலை இருந்தாக அவர் தன்னிலை விளக்கமளிக்கின்றார்.

இப்போது, தமிழரசுக் கட்சி கடும் தமிழ்த் தேசியவாதி முகத்தோடு இருக்கும் சிறீதரனிடம் சென்றிருக்கின்றது. அவர், கிளிநொச்சியில் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்திவிட்டு தன்னுடைய பயணத்தை ஆரம்பித்திருக்கிறார். அது, அவரை ஆதரித்த தரப் புக்களை குளிர்வித்திருக்கின்றது. ஆனால், அரசியலும் இராஜதந்திரமும் வெளியில் காட்டப்படும் 'படங்கள்' சார்ந்தது மட்டுமில்லை. வெளித்தெரியாத – சொல் லப்படாத ஆயிரமாயிரம் ஏற்பாடுகள் சார்ந்தவை. அதனையெல்லாம் எப்படி கையாளப் போகிறார் என்பதில்தான் சிறீதரன் தன்னை எப்படியான தலை வராக நிரூபிக்கப்போகின்றார் என்பது அடங்கி யிருக்கின்றது. அவர், இதுவரை கிளிநொச்சியில் அரசியல் செய்தவர். இப்போது, ஒட்டுமொத்த ஈழத் தமிழ் மக்களுடனும் அவர்களின் எண்ணங்களையும் பிரதிபலிக்கும் ஒருவராக இருக்க வேண்டும். தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள ஏனைய கட்சிகளுடனும், தரப்புக்களுடனும், தென் இலங்கையோடும், சர்வ தேசத்தோடும் அரசியல் செய்ய வேண்டும். தமிழ்த் தேசியப் பரப்பும் தென் இலங்கையும் சர்வதேசமும் ஒருபோதும் ஓர் அணியாக இருந்ததில்லை. மூன்றும் எதிரெதிர் துருவமாகவே அதிக தருணங்களில் இருந்திருக்கின்றன. இந்த நிலைக்குள் நின்று சிறீதரன் செயற்பட்டாக வேண்டும். தன்னை கடும் தமிழ்த் தேசியவாதியாக காட்டி வந்திருக்கின்ற அவர், பேச்சு

தொடர்ச்சி▼

# சிறீதரனின் புதிய பயணத்தின் முன்னாலுள்ள சவால்கள்?

தொடர்ச்சி▲

வார்த்தைகளில் அந்த உறுதியை வெளிப்படுத்தியாக வேண்டும். இல்லையென்றால், அவரின் கடும் தமிழ்த் தேசியவாத முகம் நொருங்கிவிடும்.

சுமந்திரன், இதுவரை காலமும் தமிழரசுக் கட்சிக்குள் செலுத்தி வந்த ஆதிக்கத்தை கைவிடும் காலம் வந்திருக்கிறது. அதற்கு அவர், கட்சிக்குள் அதிகாரமிக்க பதவிகளிலோ, பேச்சாளர் என்ற அந்தஸ்திலோ தொடரக்கூடாது. இல்லையென்றால், தமிழரசுக் கட்சி என்பது சுமந்திரனின் முகத்தினால் மீண்டும் முன்னிறுத்தப்படும். அது, பெரும்பான்மையான பொதுக்குழு உறுப்பினர்களின் எதிர்பார்ப்புக்களை இல்லாமல் செய்துவிடலாம். ஆகவே, புதிய தலைவரான சிறீதரன் அவரின் இலக்கை இடைஞ்சல்கள் இன்றி முன்னெடுப்பதற்கு சுமந்திரன் வழிவிட வேண்டும். புதிய தலைவரோடு இணைந்து இயங்குவேன் என்று சுமந்திரன் ஏற்கனவே அறிவித்திருக்கிறார். ஆனாலும் சிறீதரனுக்கு என்று புதிய செயற்திட்டங்கள் இருக்கும். அதற்காக தனக்கு இணக்கமானவர்களை பொறுப்பான பதவிகளில் அவர் நியமிக்க முயல்வார். அப்படியான நிலையில் அதற்கான வாய்ப்புக்களை சுமந்திரன் வழங்க வேண்டும். குறிப்பாக, சர்வதேச விவகாரம், சட்டத்துறை என்று அவர் கடந்த காலத்தில் கட்சியின் முகமாக செயற்பட்ட புள்ளிகளில் இருந்து விலகி புதியவர்களுக்கு இடமளிக்க வேண்டும். அது, தமிழரசுக் கட்சியின் புதிய போக்கிற்கு வழி ஏற்படுத்தலாம். இல்லையென்றால் திரும்பவும் சுமந்திரன் எல்லா இடத்திலும் வியாபித்திருக்கும் சூழல் வரும். அது, கடந்த காலத்தில் மாவை சேனாதிராஜா இருந்த நிலைக்கு சிறீதரனையும் தள்ளிவிடும்.

**முன்னாள் பங்காளிகளுக்கான அழைப்பு**

சிறீதரன் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவானதும், தமிழ்த் தேசியக் கட்சிகளை நோக்கி, 2009க்கு முன்னர் இருந்தது மாதிரியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயற்படுவதற்கான அழைப்பை விடுத்திருக்கின்றார். தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்து கூட்டமைப்பு என்பது, புலிகளின் நிலைப்பாடுகளை பிரதிபலிக்கும் அரசியல் குழு. அதற்கு மேல் முடிவுகளை அறிவிக்கும் எந்த அதிகாரமும் கூட்டமைப்பிடம் இருக்கவில்லை. அப்படியான நிலையில், 2009க்கு முன்னராக கூட்டமைப்பாக தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்ற சிறீதரனின் அழைப்பை எவ்வாறு கொள்ள வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்யும் ஏற்பாடுகள் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளினால் 2004 -2005 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. அதற்காக யாப்பு தயாரிக்கும் பணிகளும் கொழும்பில் இடம்பெற்றன. ஆனால், அந்த முயற்சிகளை உடனடியாக கைவிட வேண்டும் என்று புலிகளின் கிளிநொச்சி அரசியல் செயலகம் அறிவுறுத்தியது. அதனையடுத்து, கூட்டமைப்பைக் கட்சியாக பதியும் முயற்சிகள் கைவிடப்பட்டன. அதுதான், தமிழரசுக் கட்சியை பலம்பொருந்திய கட்சியாக மாற்ற உதவியது. ஏற்கனவே, 2004 பொதுத் தேர்தலுக்காக உறங்கு நிலையில் இருந்த தமிழரசுக் கட்சியை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்து, மக்கள் மறந்து போயிருந்த வீட்டுச் சின்னத்தை பிரபலமாக்கினார்கள்.

புலிகளின் காலத்துக்குப் பின்னர், கூட்டமைப்பைக் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்று தமிழரசுக் கட்சி தவிர்ந்த பங்காளிக் கட்சிகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். கடந்த வருடம் கூட்டமைப்பு இறுதியாக காணாமல் போவது வரையில், அந்தக் கோரிக்கை நீடித்தது. சம்பந்தனிடமும் தமிழரசுக் கட்சியிடமும் ரெலோவும், ஈபிஆர்எல்எவ்வும், புளொட்டும் கூட்டமைப்பை பதிவு செய்ய வலியுறுத்தியமை மாத்திரமல்லாமல், பொதுச் சின்னமொன்றின் கீழ் தேர்தலை எதிர்கொள்வோம் என்றும் கூறி வந்தார்கள். ஆனால், தமிழரசுக் கட்சி தன்னுடைய வீட்டுச் சின்னத்தை விட்டுச் செல்ல ஒருபோதும் தயாராக இல்லை. அப்படியான நிலையில், சிறீதரனின் கூட்டமைப்புக்கான அழைப்பை எப்படி நோக்குவது?

அதுமாத்திரமின்றி, தமிழரசுக் கட்சிக்குள் வீட்டுச் சின்னத்தில் வெற்றிபெற்றுவிட்டு, பங்காளிக் கட்சிகள் தமிழரசுக் கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் உண்டு. குறிப்பாக, தங்களின் மேல் சவாரி செய்துவிட்டு எட்டி உதைக்கும் வேலைகளில் பங்காளிக் கட்சிகள் ஈடுபடுவதனால், கட்சியின் உண்மையான தொண்டர்களுக்கு கிடைக்க வேண்டிய அங்கீகாரமும் வெற்றியும் எட்டாக்கனியாக இருப்பதான நிலை சார்ந்தது அது. அப்படியான நிலையில், அடுத்த தேர்தல்களை எதிர்பார்த்துள்ள தமிழரசுக் கட்சியினர், சிறீதரனின் அழைப்புக்கு வலுச்சேர்ப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவு. அழைப்பு வெளியானதுமே, 'ஒட்டுக்குழுக்களுடன் ஒட்டுறவு தேவையில்லை' என்ற விடயத்தை தமிழரசுக் கட்சியின் இரண்டாம் கட்ட முக்கியஸ்தர்கள் சமூக ஊடகங்களில் வெளியிடுவதைக் காண முடிகின்றது.

இன்னொரு பக்கம், சிறீதரனின் அழைப்பை ஏற்று முன்னாள் பங்காளிக் கட்சிகள் வருவது என்பது, கூட்டமைப்பை கட்சியாக பதியும் கோரிக்கை மற்றும் பொதுச் சின்னம் கோரல் என்ற விடயங்களைப் புறந்தள்ளி நிகழ வேண்டியது. பொதுத் தேர்தல் வெற்றிகளுக்காக அந்த முடிவுக்கு பங்காளிக் கட்சிகள் இணங்கினாலும், அது தேர்தல் மேடைகளில் ஒருவரை ஒருவர் காலை வாரும் காட்சிகளை கடந்த காலத்தில் பிரதிபலித்தது போல மீண்டும் நிகழலாம். அப்படியான நிலைப்பாடுகளையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் என்ன அவசரத்தில் சிறீதரன், கூட்டமைப்புக்கான அழைப்பை விடுத்தார் என்று தெரியவில்லை. இல்லையென்றால், புதிய தலைவராக அவர் ஒரு சம்பிரதாயபூர்வ அழைப்பை விடுத்திருக்கிறார் என்று மாத்திரம் கொள்ள வேண்டியிருக்கலாம். அதனை வரும் தேர்தல் காலங்கள் வெளிப்படுத்திவிடும்.

எதுவாக இருந்தாலும் கடந்த காலத்தில் சிறீதரன் செய்து வந்த இலகுவான அரசியலை இனி அவரினால் செய்ய முடியாது. ஏனெனில், ஊடக அறிக்கைகள், பேட்டிகள் என்ற அளவைத் தாண்டி முடிவு எடுக்கும் இடங்களில் அவர் பங்களித்தது இல்லை. அதனால், அவர் மீதான விமர்சனங்களும் அவ்வளவுக்கு எழுந்திருக்கவில்லை. சாதிய அடையாளத்தைச் சொல்லி திட்டுவது, கிளிநொச்சியில் பங்காளிக் கட்சிகளுக்கு இடமளிக்காமை போன்ற விடயங்களே அதிகம் அவர் மேலான கடந்த கால குற்றச்சாட்டுக்கள். ஆனால், இனி அப்படியான காலம் சிறீதரனுக்கு இருக்க வாய்ப்பில்லை. அவர், தமிழரசுக் கட்சியின் தலைவராக பொறுப்பை நிலைநாட்ட வேண்டும். அது, அவ்வளவு இலகுவான ஒன்றாக இருக்க வாய்ப்பில்லை.

# இலங்கை மீனவர் அறுவர் படகுடன் கடற்கொள்ளையர்களால் கடத்தல்

இலங்கை மீனவர்கள் சிலர் சோமாலிய கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ளனர் என இலங்கை கடற்படை தெரிவித்தது.

சீஷெல்ஸ் நாட்டை அண்மித்த வடக்கு கடற்பரப்பில், இந்த கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை மீனவர்கள் 6 பேரை ஏற்றிச்சென்ற நீண்டநாள் மீன்பிடி படகொன்று சோமாலிய கடற்கொள்ளையர்களால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என கடற்படை தெரிவித்துள்ளது. கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ள படகு, அண்மையில் திக்கோ விட்ட துறைமுகத்திலிருந்து கடற்றொழி லுக்காக சென்றதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கயான் விக்ரமசூரிய தெரி வித்துள்ளார்.

# கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பிய 34 கைதிகள் மீள விளக்கமறியலில்!

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பிச்சென்றவர்களில் மீண்டும் கைது செய்யப்பட்ட 34 கைதிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலன்னறுவை நீதிவான் நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவாகியுள்ள 13 கைதிகளைத் தேடி தொடர்ந்தும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.




இரு நாள்களுக்கு புனர்வாழ்வு நிலையத்தில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலின் பின்னர் 47 கைதிகள் தப்பிச் சென்றனர்.

இந்த மோதலில் காயமடைந்த மூவரில் இருவர் வெலிகந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தற்போது 358 கைதிகள் உள்ளனர்.

இவர்களில் யுக்திய சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டவர்களும் உள்ளடங்குகின்றனர் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# கனடாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி 6 கோடி ரூபாவை மோசடி செய்த பெண் கைது

கனடாவில் தொழில் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து 6 கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்தவர் எனக் கூறப்படும் பெண் ஒருவர் வெளிநாட்டுவேலைவாய்ப்புபணியகத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொட மீன் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவர், கனடாவில் தொழில் பெற்றுக்கொள்வதற்காக வத்தளை குடாஎதண்ட வீதியில் வசிக்கும் பெண் ஒருவருக்கு பணம் வழங்கியுள்ளார்.

பின்னர் தொழிலை பெற்றுக்கொடுக்க முடியாமல் போனதாக அந்த பெண்ணால் தெரிவிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட நபரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


இந்த முறைப்பாட்டிற்கு அமைவாக விசாரணை அதிகாரிகளால் 37 வயதான பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுவரையில் அந்த பெண்ணுக்கு எதிராக 16 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. முறைப்பாடுகளின் பிரகாரம் அவர் மோசடி செய்த பணத்தின் தொகை 6 கோடி ரூபாவுக்கும் அதிகமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



வங்கி உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் மற்றும் உயர் தொழில்களில் உள்ளவர்கள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நபர்களிடம் அந்த பெண் மோசடி செய்துள்ளார் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி கனேடிய தொழில்வாய்ப்புகளை பெற்றுத்தருவதாகக் கூறிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மேற்படி பெண் வெலிசர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



சுதந்திர தின ஒத்திகை:

# காலி முகத்திடல் பகுதியில் விசேட போக்குவரத்து முறை

சுதந்திர தின ஒத்திகை காரணமாக காலி முகத்திடல் பகுதியில் விசேட வாகன போக்குவரத்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை காலை 6 மணி முதல் 8.30 வரையிலும், காலை 11 மணி முதல் மதியம் 12.30 வரையிலும் இந்த விசேட வாகன போக்குவரத்து திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டியிலிருந்து காலி முகத்திடல் சுற்றுவட்டம் வரையான வீதி மற்றும் செரமிக் சந்தியிலிருந்து காலி முகத்திடல் சுற்றுவட்டம் வரையான வீதி ஆகிய வீதிகள்அந்த காலப்பகுதியில் மூடப்படவுள்ளன என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். எதிர்வரும் 04 ஆம் திகதி கொண் டாடப்படவுள்ள சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட வாகன போக்குவரத்து திட்டம் நடைமுறைப்படுத்தபடவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 120 மெகாவாட் மின் விநியோகம் மின் கட்டமைப்புடன் இணைப்பு

## இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ தகவல்

உமா ஓயா திட்டத்தின் கீழ் பெப்ரவரி மாதம் முதல் 120 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படுமென நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் 120 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளது.

மேலும், 31 நீர்த்தேக்கங்களில் நீரில் மிதக்கும் சூரிய மின்கலங்களை பயன்படுத்தி 3077 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின்கட்டமைப்பில் இணைக்க முடியும் எனவும் இதற்கு பொருத்தமான நீர்த்தேக்கங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே, இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ இந்த விடயங்களைத் தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக தேசிய உணவு பாதுகாப்பிற்கு பங்களிப்பதையே, 2024 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன அமைச்சின் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜனாதிபதியால் இவ்வருட வரவு – செலவு திட்டத்தில் நீர்ப்பாசன அமைச்சுக்கு 23,413 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் நீர்த்தேக்க பராமரிப்புக்காக 6,913 மில்லியன் ரூபாவும் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 16,500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு உள்நாட்டு நிதியாக 4,678 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அதில் 1,590 மில்லியன் ரூபா விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கால்நடை மேம்பாட்டிற்கு 930 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக பல பாரிய பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், உமா ஓயா திட்டத்தின் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

வடமத்திய பெரிய கால்வாய் நிர்மாணம் மூலம் 07 பிரதான குளங்களுக்கும் 350 சிறிய குளங்களுக்கும் இரு போகங்களுக்குத் தேவையான நீரை வழங்க முடியும். மேலும் 1,85,000 பேருக்கு குடிதண்ணீர் வழங்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.” – என்றார்.



# புதிய கூட்டணி அங்குரார்ப்பணம் ஜா-எலயில் நேற்று பொதுக்கூட்டம்

வலுவான பொருளாதாரம், வெற்றியை நோக்கிய பயணத்திற்கான புதிய கூட்டணியின் அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம் ஜாஎல நகரில் நேற்று நடைபெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன் றத்திற்கு தெரிவான சில அமைச்சர்களின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

புதிய கூட்டணியின் கம்பஹா மாவட் டத் தலைவரும் வர்த்தக, உணவுப் பாதுகாப்பு அமைச்சருமான நளின் பெர்னாண்டோ, புதிய கூட்டணியின் கொழும்பு மாவட்ட தலைவரும் கல்வி அமைச்சருமான கலாநிதி சுசில் பிரேம ஜயந்த , கூட்டணியின் செயற்பாட்டுத் தலைவர் அனுர பிரியதர்ஷன யாப்பா, கூட்டணியின் ஸ்தாபகர் நிமல் லன்சா உள்ளிட்ட பலரும் கூட்டணியின் அங்கு ரார்ப்பணக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

ஜாஎல-யிலுள்ள முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் 16 பேரும் ஏழு தொழிற்சங்களின் உறுப்பினர்களும் புதிய கூட்டணியுடன் இணைந்துகொண்டனர்.

# ஒப்பந்தக் கொலைகளுடன் படையினருக்குத் தொடர்பு?

## பொலிஸ் விசாரணையில் பரபரப்பு தகவல்

பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்புடைய குற்றச் செயல்களில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பலர் செயற்படுகின்றனர் எனப் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக 'தி ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் சமீபகாலமாக நடந்த பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்த இராணுவ உத்தியோகத்தர்கள் தமது கடமை நேரத்தின் போது முகாம்களை விட்டு வெளியேறி தமது கடமை ஆயுதங்களைப் பயன்படுத்தி மக்களைக் கொன்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு தீவிரமான நிலை என்றும், இந்தச் செயல்களை தடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், இது ஆபத்தான போக்காக மாற வாய்ப்புள்ளது என்றும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் சிலர்



போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும், மேலும் சிலர் கடும் நிதி நெருக்கடியில் உள்ளவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒப்பந்தம் மூலம் கொலைகளைச் செய்த பாதுகாப்புப் படையினர் பலர் அண்மையில் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் அண்மையில் அம்பலாங்கொட பிரதேசத்தில் மீன் வியாபாரி ஒருவரைக் கொல்லச் சென்ற வேளையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமையுடன், அதற்காகவே அவர்கள் ஆயுதம் ஏந்தியிருந்ததும் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினர் குற்றச் செயல்கள் இடம் பெற்ற போது கடமையில் இருந்தமையால் அவர்களைக் கைது செய்வது மிகவும் சிரமமாக இருந்ததாகப் பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.01.2024




இன்று பதற்றமான சூழ்நிலைகள் காணப்படும். அதனை சமாளிப்பதற்கு கால தாமதமாகும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல. சில சௌகரியங்களை விட்டு கொடுக்க நேரும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரும். தேவையற்ற செலவினங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று ஆன்மீகத்தில் ஈடுபடவேண்டிய சூழல் ஏற்படும். அது உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

வெற்றிகரமான பலன்களை காண்பதற்கு நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். இன்று பணிகள் நிலுவையில் இருக்கும். தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள்.இதனை தவிர்த்தல் நல்லது. அமைதியாக இருக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரியுங்கள்.

கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன்கள் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள்களில் வலி காணப்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். உங்களின் உறுதியும் தைரியமும் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். மொத்தத்தில் இன்று காணப்படும் வளர்ச்சி உங்களுக்கு தன்னம்பிக்கையை கொடுக்கும்.

புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மனம் திறந்து கருத்துக்களை பரிமாறிக் கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பணம் கிடைக்கக் கூடிய அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன உறுதி காரணமாக இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உற்சாகமான நிலையை பராமரிப்பீர்கள். அதிக சிந்தனைகளை தவிர்த்தல் வேண்டும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் அமைதி பெறலாம்.

பணிகள் அதிகமாக காணப்படும். எனவே தவறுகள் நேரலாம். எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்களின் எரிச்சல் மனப்பான்மையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையை நட்பு முறையில் அணுக வேண்டும்.

கவனக்குறைவு காரணமாக பண இழப்பு ஏற்படலாம். தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்க வேண்டும். உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்க தெளிவான மனதுடன் இருக்க வேண்டும்.

பணிகள் கடினமாக காணப்படும். பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் தோன்றும் கசப்பு உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும்.

கூடுதலான தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் கவலைகள் உண்டாகும். பண இழப்புகளும் காணப்படும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் நல்ல பலனைத் தரும்.




இன்று பலன்களில் ஏற்றத்தாழ்வு காணப்படும். உங்கள் பணிகள் சுமுகமாக நடக்க நீங்கள் அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். நல்ல பலன்களைப் பெற நம்பிக்கையோடு இருங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். சக பணியாளர்களிடம் கவனமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.உங்கள் பிரியமானவரை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள்.

இன்று நிதிநிலை சீராக இருக்காது. இன்று நிதி நிலையை சமாளிப்பது கடினம்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண் பரிசோதனை செய்துகொள்வது நல்லது.




இன்று முன்னேற்றமான நாள். எதிர்காலம் பற்றிய பரந்த நோக்கு கொண்டிருப்பீர்கள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெற கடினமாக உழைப்பீர்கள். இடையில் ஏற்படும் தடைகளை முறியடிப்பீர்கள்.

பலன் எதையும் எதிர்பார்க்காமல் பணியாற்றுங்கள். இதன் மூலம் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து தர இயலும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக விசுவாசமாக இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் அபரிமிதமாக காணப்படும். இன்று வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். உங்கள் ஆற்றலை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள்.




சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள். உங்கள் வளர்ச்சி இன்று உறுதி. இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் வேலைகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கு உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்களின் நம்பிக்கை உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணபுழக்கம் சீராக இருக்கும். உங்கள் ஆற்றலை நிதி வளர்ச்சிக்கு பயன்படுத்துவீர்கள்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.01.2024

### தனுசு

இன்று நீங்கள் எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ளவேண்டும். இன்று புதிய மனிதர்களின் சந்திப்பை பெறுவீர்கள். இதனால் உங்களின் தொடர்பு வட்டாரம் விரிவடையும். வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று மும்மரமாக காணப்படுவீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும் என்ற காரணத்தினால் திறமையான முறையில் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்

உங்கள் துணையுடன் கருத்து வேற்றுமை அல்லது விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடன் நட்பாக பழக வேண்டும்.

நிதிநிலைமை சுமாராக இருக்கும். பணம் வருவதற்கான அதிர்ஷ்டம் குறைவு.

### கும்பம்

இன்று நற்பலன்கள் கிடைக்கும் நாள். முன்னேற்றத்தை நோக்கி செல்வீர்கள். முக்கியமான முடிவுகள் இன்று பலன் தரும்.

உங்கள் தனித் திறமைக்காக பாராட்டப்படுவீர்கள். உங்கள் சக பணி யாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்களின் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் பிரிய மானவரை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருங்கள்.

இன்று பணப்புழக்கம் திருப்தி அளிக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீட்டு முயற்சிக்கான திட்டங்களை வகுக்கலாம்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உயர்ந்த ஆற்றலும் உறுதியும் உங்களிடம் காணப்படும்.

### மகரம்

இன்று நீங்கள் தன்னம்பிக்கை இழக்கக் கூடிய கடினமான சூழ்நிலை காணப்படும். நம்பிக்கையுடன் சவால் களைக் கையாள வேண்டும். பிரார்த் தனையில் ஈடுபடுவது நல்ல பலனைத் தரும்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளை முடிப்பதில் தாமதங்கள் நேரலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்களின் சிறந்த பேச்சாற்றல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை கொண்டிருப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த முடியும்.

பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் பிரியமானவரின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும்

### மீனம்

இன்று நீங்கள் விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன்களை தரக்கூடிய திட்டங்களை வகுப்பீர்கள்.

பணியிடச் சூழல் முன்னேற்றகரமான பலன்களைத் தரும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

பணியில் காணப்படும் பதட்டம் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தகைய சூழ்நிலைகளை தவிர்க்க வேண்டும். இருவரிடையே நல்லுறவு ஏற்பட விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும். பணபுழக்கம் சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும். நிதி பாதுகாப்பு காணப்படும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.





